பாசிசத்திற்கு எதிரான மாநாட்டில் பங்கேற்க வி.சிவதாசனுக்கு அனுமதி மறுப்பதா?

# எம்.பி.க்களின் உரிமைகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசே கை வைக்காதே!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்!

புதுதில்லி, நவ. 6 -

வெனிசுலாவில் நடைபெறும் 'பாசிசத்திற்கு எதிரான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில்' பங்கேற்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் வி. சிவதாசனுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அனுமதி மறுத்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் அரசியல் தலைமைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வெனிசுலாவின் தலைநகர் காரகஸில் பாசிசத்திற்கு எதிராக நடைபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் பங்கேற்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் வி. சிவதாசனுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அனுமதி மறுத்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. ஆளுங்கட்சியின் கருத்துக்களுக்கு இணங்காத எந்தக் குரலையும் நசுக்கும் முயற்சி இது. பாசிசத்திற்கு எதிராக நடைபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் பங்கேற்க தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்து அனுப்புமாறு வெனிசுலாவின் நாடாளுமன்றத்தில் இருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதையேற்று, மார்க்சிஸ்ட் கட்சி டாக்டர் வி.சிவதாசனை மாநாட்டில் பங்கேற்குமாறு பணித்திருந்தது. பல்வேறு நாடுகளிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கிறார்கள். வெளிநாட்டு பங்கேற்ற ஒழுங்கு முறை சட்டத்தின் கீழ் அனுமதி பெற்ற பின்பு, ஒன்றிய அரசின் வெளி நாட்டு விவகாரங்கள் அமைச்சகம் சிவதாசனுக்கு அனுமதி மறுத்திருப்பதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு இருந்துவரும் உரிமையைப் பறித்திடும் செயலாகும்.

மோடி அரசாங்கம், தனது கொள்கைக்கெதிராக கருத்து கூறுபவர்களைத் தடுத்திடும் விதத்தில், அரசியல்ரீதியில் பாகுபாடு காட்டும் கொள்கையைப் பின் பற்றிக் கொண்டிருக்கிறது. இது அனைத்து எதிர்க்கட்சிகளும் அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவலைப்பட வேண்டிய விஷயமாகும்.

### வாலிபர் சங்கம் கண்டனம்!

இது தொடர்பாக இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "வெனிசுலா அரசின் இந்த முக்கிய நிகழ்ச்சிக்கு உலகளவில் 300க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். இந்தியாவும் வெனி சுலாவும் அணி சேரா இயக்கத்தின் உறுப்பினர்களாக இருப்பதுடன், பல சர்வதேச அரங்குகளில் நெருக்கமான உறவைப் பேணி வருகின்றன.

இந்நிலையில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வி.சிவதாசனுக்கு பயண அனுமதி மறுக்கப் பட்டுள்ளது அரசின் ஜனநாயக விரோத போக்கைக் காட்டுகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப் பட்ட மக்களின் குரலை சர்வதேச அரங்கில் ஒலிக்க விடாமல் தடுப்பது கண்டனத்துக்கு உரியது.

ஒன்றிய அரசின் இந்த அணுகுமுறை தனது இனவாத பாசிச போக்கு சர்வதேச அளவில் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில் இருந்து எழுந்ததாகும். இத்தகைய ஜனநாயகவிரோத செயல்களுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் குரல் கொடுக்க வேண்டும்" என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் பூதலூர் வட்டம்

# கோட்டாரப்பட்டி கிராமத்திற்கு பேருந்து வசதி!

## ச.முரசொலி எம்.பி. - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தனர்!

தஞ்சை, நவ. 6 -

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டம் கோட்டாரப்பட்டி கிராமத்திற்கு பேருந்து வசதியினை தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி மற்றும் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் 04.11.2024 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படியும், கோட்டாரப்பட்டி பள்ளி, மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் மண்டலம் சார்பில், தஞ்சாவூர்2 கிளை மூலம் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் நகர தடம் எண்B27 காலை மற்றும் மாலை நேரங்களில் தொண்டராயன்பாடி வழியாக கோட்டாரப்பட்டி வரை தடநீட்டிப்பு செய்து 04.11.2024 முதல் இயக்கப் படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொதுமக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் இப்பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அரசின் இதுபோன்ற சிறப்பான திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்கிறோம் என தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர், திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கேட்டு கொண்டனர்.

கோட்டாரப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர். உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர் கல்லணை செல்லக்கண்ணு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கும்பகோணம் கோட்ட பொது மேலாளர்எஸ்.ஸ்ரீதரன், துணை மேலாளர் (வணிகம்) A. தமிழ்செல்வன், கிளை மேலாளர் திரு.ரமேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் எம்.ராஜா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**06/11/2024 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா | விழுப்புரம் - புதுச்சேரி பிரதான சாலை, விழுப்புரம். |
| காலை 11:00 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம். |
| மதியம் 12:30 மணி | விழுப்புரம் தெற்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். |
| இரவு 7:00 மணி | சட்டமன்ற உறுப்பினர் கதிரவன் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சி. |

**07/11/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் 'கல்லணை' செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024

